## மதுரை, தமுக்கம் மைதானத்தில் மதி கண்காட்சி மற்றும் உணவுத் திருவிழா:

# மகளிர் முன்னேற்றம்தான் ஒட்டுமொத்த இந்தியாவின் முன்னேற்றம்!

## மதுரையில் நடைபெற்ற விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

மதுரை, நவ. 23–

**மதுரை, தமுக்கம் மைதானத்தில் மதி கண்காட்சி மற்றும் உணவுத் திருவிழாவை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து, மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 500 சகோதரிகளுக்கு அடையாள அட்டை வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

அப்போது அவர், ``மகளிரான உங்களின் முன்னேற்றம்தான் ஒட்டுமொத்த தமிழ்நாட்டின், இந்தியாவின் முன்னேற்றம். அப்படி பெண்களுக்காக நடைபெறுகிற இந்த திராவிட மாடல் அரசுக்கும், நம் முதலமைச்சருக்கும் மகளிராகிய நீங்கள் தொடர்ந்து உங்களின் ஆதரவைக் கொடுக்க வேண்டும்'' என்று அவர் குறிப்பிட்டார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரையின் விவரம் வருமாறு:

மதுரை என்றாலே எப்போதுமே ஒரு கிராமிய மணத்தோடு இருக்கக்கூடிய ஒரு நகர். அதேபோன்று, பாசத்தைப் பொழிவதிலும்மதுரையைவிஞ்சுவதற்கு வேறு எந்த ஊராலும் இயலாது. இந்த உணவுத் திருவிழாவிற்கு வந்த சிறிது நேரத்திலேயே, உங்களின் பாசத்தால் நனைந்து, வயிறு நிறைந்து இந்த மேடைக்கு வந்திருக்கிறேன். கடந்த ஆண்டு சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த உணவுத் திருவிழா, சென்னை மக்களிடையே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றது. இந்த ஆண்டு மதுரையில் நடத்தப்பட வேண்டும் என்று முடிவெடுத்து, இந்த நிகழ்வை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறோம்.

### சுயஉதவிக் குழுக்கள்

தமிழ்நாட்டைச் சேர்ந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் மட்டுமல்லாமல், பல மாநிலங்களைச் சேர்ந்த சுயஉதவிக் குழுச் சகோதரிகள், இன்றைக்கு இந்தக் கண்காட்சியிலும், உணவுத் திருவிழாவிலும் பங்கேற்று இருக்கிறீர்கள். நிறைய பேர் இந்திய முழுவதும் சுற்றுலா செல்ல விரும்பலாம். இந்தத் தமுக்கம் மைதானத்துக்கு அடுத்த பன்னிரண்டு நாட்கள் வந்தால் போதும், கிட்டத்தட்ட ஓர் இந்திய முழுவதும் சுற்றுலாவுக்குப் போய் வந்த உணர்வு நிச்சயம் வருவோருக்கு உண்டாகும். அதேபோல, தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் பிரபலமான பொருட்களையும் இங்கே சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் விற்பனைக்கு வைத்துள்ளார்கள். தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகள், கோயம்புத்தூர் ஐம்பொன் நகைகள், கள்ளக்குறிச்சி மரச் சிற்பங்கள், ஈரோடு நூல் வளையல்கள் என்று மிகப் பெரிய பட்டியலையே தந்திருக்கிறார்கள்.

உணவுத் திருவிழாவை எடுத்துக்கொண்டால், கடந்த ஆண்டு சென்னை மக்கள் மிகப் பெரிய வரவேற்பைக் கொடுத்தார்கள். இந்த ஆண்டு மதுரையில் இருக்கக்கூடிய மக்கள் இங்குள்ள தமுக்கம் மைதானத்துக்கு வந்து, இந்த பல்வகை உணவுகளைச் சுவைத்து, இதற்குப் பெரிய வரவேற்பு கொடுப்பார்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். சென்ற ஆண்டு சென்னையில் ஐந்து நாட்கள் நடந்த உணவுத் திருவிழாவில் விற்பனை ஓர் கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்தைத் தாண்டியது.

இன்றைக்கு மதுரையில் பன்னிரண்டு நாட்கள் நடக்கக்கூடிய இந்த விற்பனை சென்ற ஆண்டைவிட அதிகமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த உணவுத் திருவிழாவில் தயாரிக்கப்பட்டிருக்கக் கூடிய உணவுப் பொருட்கள் அனைத்தும், சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளின் சொந்தத் தயாரிப்பு, அவர்களின் உழைப்பு. இந்தக் கண்காட்சியில் நீங்கள் வாங்குகின்ற ஒவ்வொரு பொருளும், மகளிர் சுயஉதவிக் குழுவின் சகோதரிகளுக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய அன்பு, ஊக்கம்.

### 620 கோடி ரூபாய்

இவ்வாறு நம்முடைய அரசு எடுத்த நடவடிக்கையால், இந்த ஆண்டு இதுவரை மட்டும் 620 கோடி ரூபாய்க்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பொருட்கள் விற்பனையாகி, மிகப் பெரிய சாதனையைச் செய்து காட்டியிருக்கிறோம். கடந்த பத்து ஆண்டுகால ஆட்சியில், அரசின் இதே துறையின் விற்பனை எவ்வளவு என்று பார்த்தால், அதிகபட்சம் ஒரு வருடத்திற்கு பத்து கோடி ரூபாயைத் தாண்டவில்லை. ஆனால், நம்முடைய திராவிட மாடல் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய முயற்சியால், இன்றைக்கு இந்த வருடம் மட்டும் அறுநூற்று இருபது கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையைச் செய்து, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தி காட்டியிருக்கின்றீர்கள்.

மகளிர் பொருளாதாரத்தில் மேம்பட வேண்டும், சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும் மகளிருக்காகச் செய்து வருகிறார்கள். ஆட்சிப் பொறுப்பேற்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டம். இன்றைக்குப் பெண்கள் கட்டண மில்லாமல் பேருந்துப் பயணங்களை மேற்கொண்டு வருகிறீர்கள். வீட்டுக்குள்ளே முடக்கி வைக்கப்பட்டிருந்த பெண்களுக்கு விடுதலை கொடுத்த திட்டம் தான் மகளிர் விடியல் பயணத் திட்டம்.

குழந்தைகள் பசியில்லாமல் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும் என்று முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. பெண் குழந்தைகளின் கல்வி உயர்வுக்காக புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சர் அவர்கள் மகளிர் உரிமைத் திட்டத்தைக் கொண்டுவந்துள்ளார்கள். இந்தத் திட்டத்தில் கடந்த இரண்டரை வருடங்களாக ஒரு கோடியே பதினைந்து இலட்சம் மகளிருக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

### அடையாள அட்டை

குறிப்பாக, சுயஉதவிக் குழுவினர் என்று எந்த ஒரு திட்டத்தைச் சொன்னாலும், முதலமைச்சர் அவர்கள் அதற்கு உடனே ஒப்புக்கொள்வார். இன்றைக்கு, இந்த நிகழ்ச்சியில் ஐந்நூறு குழுக்களுக்கு அடையாள அட்டை கொடுக்க இருக்கிறோம். திருவாரூரில் ஒரு மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளைச் சந்திக்கும்போது, அவர்கள் வைத்த கோரிக்கைதான், மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டை வழங்க வேண்டும் என்பது. அந்தக் கோரிக்கையை ஏற்று, முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஒப்புதல் கொடுத்து, இன்றைக்கு ஐந்நூறு குழுக்களுக்கு அடையாள அட்டையை வழங்க இருக்கிறோம். இந்த அடையாள அட்டைகள் மூலமாக நீங்கள் உருவாக்குகின்ற, உங்களின் தயாரிப்புப் பொருட்களை 25 கிலோ வரை, 100 கிலோமீட்டர் தூரம் வரை கட்டண மில்லாமல் நீங்கள் எடுத்துச் செல்ல முடியும்.

### அன்பு வேண்டுகோள்

இந்த விழாவுக்குக்கூட குழுச் சகோதரிகள் உங்களின் தயாரிப்புகளைக் கட்டணமில்லாமல், உங்களின் தயாரிப்புப் பொருட்களைப் பேருந்துகளில் கொண்டு வரலாம். சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு ஓர் அன்பு வேண்டுகோள். அந்த அடையாள அட்டைகளை நீங்கள் பராமரித்து, அதிகமாகப் பயன்படுத்த வேண்டும்.

மகளிர் அடுத்தவர்களிடம் வேலை கேட்டு நிற்கிற நிலைமை மாறி, அடுத்தவர்களுக்கு வேலை கொடுக்கின்ற நிலைமைக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். அதற்கு உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் எந்த நேரத்திலும் செய்வதற்கு தயாராக இருக்கிறது. மகளிரான உங்களின் முன்னேற்றம்தான் ஒட்டுமொத்த தமிழ்நாட்டின், இந்தியாவின் முன்னேற்றம். அப்படி பெண்களுக்காக நடைபெறுகிற இந்த திராவிட மாடல் அரசுக்கும், நம் முதலமைச்சருக்கும் மகளிர் நீங்கள் தொடர்ந்து உங்களின் ஆதரவைக் கொடுக்க வேண்டும்.

முதலமைச்சர் எடுக்கின்ற முயற்சிகளுக்கு, பெண்கள், தாய்மார்கள் நீங்கள் எப்போதும் பக்கபலமாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. இன்றைக்கு இந்த சரஸ் விற்பனைக் கண்காட்சியும், உணவுத் திருவிழாவும் திறக்கப்பட்டுள்ளது. இது வெற்றி பெறுவதற்கு வாழ்த்துகள். அடையாள அட்டைகளைப் பெற்ற சகோதரிகளுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தளபதி, வெங்கடேசன், பூமிநாதன், அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சஜ்ஜீவனா ஐ.ஏ.எஸ்., மதுரை மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார், ஐ.ஏ.எஸ்., மதுரை மாநகராட்சித் துணை மேயர் நாகராஜன், மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன், ஐ.ஏ.எஸ்., மகளிர் திட்ட இயக்குநர் தமிழரசி மற்றும் அரசு அதிகாரிகள் அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

# உவமைக் கவிஞர் சுரதா 105 வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு – அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, நவ. 23-

உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் 105-வது பிறந்த நாளான 23.11.2025 இன்று காலை 9.30 மணியளவில் சென்னை, அசோக் பில்லர் மாநகராட்சி பூங்கா அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.



உவமைக் கவிஞர் சுரதா அவர்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையனூர் எனும் சிற்றூரில் 1921 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் நாள் பிறந்தார். கவிஞர் சுரதா அவர்களின் இயற்பெயர் இராசகோபாலன். இவர், பள்ளிப் படிப்பினைச் சிறப்பான முறையில் முடித்தபின், சீர்காழி அருணாசல தேசிகரிடம் தமிழ் இலக்கணங்களை முழுமையாகக் கற்றுத் தேர்ந்தார்.

பாவேந்தர் பாரதிதாசனிடம் கொண்ட தீவிரப் பற்றின் காரணமாக, பாரதிதாசனின் இயற்பெயராகிய "சுப்புரத்தினம்" என்பதுடன் "தாசன்" சேர்த்து "சுப்புரத்தினதாசன்" எனத் தம்மை அழைத்துக் கொண்டார். அதையே சுருக்கி, "சுரதா" என்றும் குறிப்பிடத் தொடங்கினார். அதன் பின்னர், அவர் இயற்பெயரே மறைந்து சுரதா என்னும் புகழ்ப் பெயரே நிலைத்துவிட்டது. "சுரதா" என்னும் பெயரில் பல மரபுக் கவிதைத் தொகுப்புகளைப் படைத்தார். செய்யுள் மரபு மாறாமல் எழுதி வந்த இவர், உவமைகள் அமைத்து எழுதுவதில் தனிப்புகழையும் பெற்றார். இதன் பொருட்டே இவர், "உவமைக் கவிஞர்" என்று அனைவராலும் பெருமிதத்தோடு அழைக்கப்பட்டார்.

1941ஆம் ஆண்டில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களை முதன்முறையாகச் சந்தித்து அவர்பால் ஏற்பட்ட மிகுந்த அன்பின் காரணமாக, அவரது கவிதைப் பணிக்குப் பேருதவியாக விளங்கினார். பாவேந்தரின் கவிதைகளால் ஈர்க்கப்பட்டு, அவருடைய அறிவுரைப்படி, அவரின் பாடல்களைப் படியெடுத்தல், அச்சுப் பணிகளை உடனிருந்து மேற்கொள்ளல் ஆகியவற்றுடன் அவருடைய நூல்கள் பலவற்றின் வெளியீட்டிற்கும் துணைபுரிந்தார்.

சுயமரியாதை இயக்கத்தின் கருத்துகளைப் பரப்பும் வகையில், நாடகக்குழு ஒன்றினை அமைத்து, தந்தை பெரியார், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், ஆகியோர் தலைமையில் நடைபெற்ற 'புரட்சிக்கவி' நாடகத்தில் நடித்தார். அந்நாடகம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றது.

உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் பாடல்கள், உரையாடல்கள் எழுதியுள்ளார். "அமுதும் தேனும் எதற்கு, நீ அருகினில் இருக்கையிலே எனக்கு"; "ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்த மடா" முதலிய, இவர் எழுதிய பாடல்கள் என்றும் மங்காத புகழ் பெற்றவையாகும். இவரது முதல் நூல் "சாவின் முத்தம்" ஆகும். 1954 முதல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் "முரசொலி" இதழில் சுரதா அவர்கள் தொடர்ந்து எழுதிய எழுச்சியூட்டும் கவிதைகளுக்கு மிகுந்த வரவேற்பு கிடைத்தது.

1955-ல், உலகிலேயே முதன்முறையாகக் கவிதை நடையிலேயே "காவியம்" என்கிற வார இதழைத் தொடங்கிய பெருமை இவரையே சேரும். தொடர்ந்து இலக்கியம் (1958), ஊர்வலம் (1963), விண்மீன் (1964), சுரதா (1988) எனப் பல இலக்கிய ஏடுகளையும், இதழ்களையும் தொடங்கி கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தார். 1969-ல் "தேன் மழை" என்கிற இவரது கவிதை நூலுக்குத் தமிழ்நாடு அரசு பரிசு வழங்கிப் பாராட்டியது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்தபோது, 1972-இல் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதும், 1990ஆம் ஆண்டில் கலைத்துறை வித்தகருக்கான "பாரதிதாசன் விருதும்" வழங்கப்பட்டு, இவர் சிறப்பிக்கப்பட்டார்.

2007ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கவிஞர் சுரதா அவர்கள் எழுதிய நூல்கள் அனைத்தையும் அரசுடைமையாக்கி, அவரது மரபுரிமையருக்கு ரூபாய் 10 இலட்சம் பரிவுத் தொகை வழங்கினார். மேலும் கவிஞர் சுரதா அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், சென்னை, அசோக் நகரில் அவரது திருவுருவச் சிலையை, 29.9.2008 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அப்போது அவர்கள் ஆற்றிய உரையில், "சுரதா வெறும் புலவர் மாத்திரமல்ல, கவிஞர் மாத்திரமல்ல, தந்தை பெரியார் அவர்களால் தயாரிக்கப்பட்ட சுயமரியாதைப் போர்வாளாகவும் திகழ்ந்தார்" என்று கூறிப் பாராட்டினார்.

தமிழ் இலக்கியத்திற்கும், இலக்கணத்திற்கும் தனிப்பெருந் தொண்டாற்றிய சிறப்புமிக்க உவமைக் கவிஞர் சுரதா அவர்களைப் போற்றும் வகையில், அவருடைய பிறந்த நாளான நவம்பர் 23-ஆம் நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டின் உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் பிறந்த நாளில், தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், அவரது திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து, மலர்கள்தூவி மரியாதை செலுத்துகிறார்கள். இந்நிகழ்ச்சியில், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! பி.ஸ்ரீராமுலு எம்.சி. தலைமையில்

# சென்னை கிழக்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் குடிசை மாற்று வாரிய மக்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் – நடிகர் கருணாஸ் வழங்குகின்றனர்!

சென்னை, நவ.23-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக விவசாய தொழிலாளர் அணி சார்பில் துறைமுகம் மேற்கு பகுதியில், குடிசை மாற்றுவாரிய குடியிருப்புவாசிகளுக்கு -குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், முக்குலத்தோர் புலிப்படைதலைவர், திரைப்பட நடிகர் கருணாஸ் ஆகியோர் நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக விவசாய தொழிலாளர் அணி சார்பில் சார்பில், துறைமுகம் மேற்கு பகுதியில், மனித நேய உதயநாளை முன்னிட்டு "உதயம் 8", நெஞ்சில் உதயம் குடியிருப்பு! நேர்மை நமது உயிர்த்துடிப்பு! எனும் தலைப்பில், மாபெரும் நலத்திட்டம் 23/11/25 ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 9.30 மணியளவில், சென்னை, அம்மன் கோயில் தெரு, ஜி.எம்.டி.டி.வி பள்ளியில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில், 5வது மண்டல குழு தலைவர், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர், துறைமுகம் மேற்கு பகுதி பொருளாளர் பி.ஸ்ரீராமுலு தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத் எம்.சி, என்.பி. எம்.சேக் அப்துல்லா, எல்.சம்பத்குமார், பி.விஜயகுமார், இரா.கலைச்செல்வி, பா.ஜெகதீஷ், எம்.வினாயகம், எம்.இப்ராஹிம்கனி, பா.பிரதீப்குமார், நா.ரஞ்சித் விஜயாலயன், முன்னிலை வகிக்கின்றனர்.

மே.ஜனார்தனன், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துகுமார், ந. சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ. தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன். துறைமுகம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: ஜி. ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதீஷ்கமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், கதிரவன்(எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், ராஜேஷ்ஜெயின் எம்.சி, வெ.பரிமளம் எம்.சி, எல்.நவின் எம்.சி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் இந்நலத்திட்ட விழாவில் - குடிசைமாற்று வாரிய குடியிருப்புவாசிகளுக்கு -குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், முக்குலத்தோர் புலிப்படை தலைவர், திரைப்பட நடிகர் கருணாஸ் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கின்றனர்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், திரு.தயாநிதிமாறன் எம்.பி, கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், பரிதிஇளம்சுருதி எம்.சி. கோ. ஏகப்பன், தேவஜவகர் புனிதவதி எத்திராசன் எம்.சி, கூ.பீ. ஜெயின், சரிதாமகேஷ்குமார், சொ.வேலு எம்.சி, டாக்டர்.ஜி. சாந்தகுமாரி எம்.சி,

பகுதி கழக செயலாளர்கள்: ஜசிஎப்.வ.முரளிதரன் எ.நாகராசன் எம்.சி, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர் நாகராஜ், வே.வாசு, செ.தமிழ்வேந்தன் எம்.சாமிக்கண்ணு வி.சுதாகர், கே.எஸ்.எம்.நாதன் எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி. ஜே.துளசிங்கம், பி.உதய சங்கர், ரமேஷ்(எ) நிலகண்டன், டி.வி.செம்மொழி, சாவித்திரிவீரராகவன், டாக்டர் ஏ.பி.பூர்னிமா எம்.சி, அ.நிர்மலாதேவி. மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: வானவில் விஜய், ஜே.பாலமுருகன், பி. ஜெகதீஷ், க.வினோத், ஜி. ஜே.பிரபு, எஸ்.தனசேகர், ஆர். டி.சங்கர் நானா, நா. துலுக்கானம், எல்.பி.எப். மோகன், ஜி.தாமோதரன், சுதாதீனதயாளன், ராஜேஷ்வரிஸ்ரீதர். துரைகண்ணன், எம். பெரோஸ்கான், ஜி.வி. நாகவள்ளி, மா.அசோக்குமார் கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்முகமது, து.ஆயிரம், ஆர்.ஸ்.சித்திக் இரா.வீரமணி,

துறைமுகம் மேற்கு கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: லண்டன்.க.முருகன், எழில் அரசு, G.மாசிலாமணி, M.V.R. சரவணக்குமார், எம்.நாராயணன், வி.எம்.முருகவேல், வி.அசோக்குமார், டி.எஸ். சேகர், கே.ஆர்.மதன் ஏ.பி. எஸ்.செந்தில்குமார், வி.சங்கர், எஸ்.கதிர்வேலு, ஆர்.தங்கமணி, ஏ.மதுசூதனன் பி.ஜி.சுகுமார், டி.சுபாஷ்சந்திரபோஸ்,

ஹாஜி முகமதுஅலி சேகர் (எ) பிரஸ்சேகர், வீடியோ. கே.சம்பத், எம்.சுரேஷ், பி.சகாயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் வட்ட கழக செயலாளர் ஆர். ரவிச்சந்திரன், பா.கதிரவன், மா.ஜெய்சங்கர் நன்றி கூறுகிறார்கள்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்டவட்ட வார்டு கிளை பாகஇளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகம் கூட்டம் திருவேற்காடு ஜிபி.பேலஸில் நடைபெறுகிறது. இதில் கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார். இந்நிலையில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதிகளை செயலாளர்கள் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள்கடக நிர்வாகிகள் உள்ளனர்




காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் சாலவாக்கம் – ரெட்டைமங்கலம். ஊராட்சியில் தமிழக அரசின் விலை இல்லா மிதிவண்டியை மாணவ மாணவியருக்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் டி.குமார், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ்.ஆர்.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவராமன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சேகர், நதியா, கோபி, ஊராட்சி மன்ற தலைவர்கள் திருமதி. சத்யா சக்திவேல், திருமதி. சுஜாதா ஜெயராமன், வெங்கட்ராமன், கோகுல், மோகன், துணைத் தலைவர். இ.நந்தா, ஒன்றிய கழக நிர்வாகிகள் என்.எஸ்.ரவி, வி.பாலமுருகன், ஐ.பாபு ஷெரிப், பி.வி.அழகப்பன் மற்றும் கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர் சொந்த செலவில் சென்றாண்டு பன்னிரெண்டாம் பத்தாம் வகுப்பு முதல் மூன்று இடத்தை பிடித்த மாணவ, மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கினார்.